சி.சி.எண்.112/2024 நாள்: 12.11.2025

அ.சா.1- கர்ணன், த/பெ. செல்வராஜ்

எதிரிகள் ஆஜர்

(சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

1. நானும், எதிரிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். நானும் 3வது எதிரியும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள். 1,2 எதிரிகள் வேறு இனத்தை சேர்ந்தவர்கள். இனப்பாகுபாடு இருக்கக்கூடாது என்பதற்காக சமத்துவ சமுதாய சமதர்ம இளைஞர் நற்பணி மன்றம் உள்ளது என்றால் சரிதான். சமத்துவ சமுதாய சமதர்ம இளைஞர் நற்பணி மன்றம் தொடர்பான பிரச்சனையினால் நான் எதிரிகளுடன் பேசிக் கொள்ளமாட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி மன்றத்தில் நான் தலைவராக உள்ளேனா என்றால் இல்லை, அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை. மேற்படி மன்றத்தினால்தான் எனக்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த 2 வது நாள் புகார் கொடுத்தேன். புகாரை யார் எழுதியது என்றால் எனக்கு கையில் அடிபட்டிருந்ததால் போலீஸ் ஒருவர் நான் சொல்ல சொல்ல எழுதிக் கொண்டார். புகாரில் புகார் கொடுத்ததற்கான தேதி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், என்னிடம் 2 பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள்.

2. நான் அரசு மருத்துவமனைக்கு எப்படி போனேன் என்றால் 108 ஆம்புலன்ஸ் மூலம் போனேன். மருத்துவமனையில் மருத்துவர் கேட்ட போது நான் குடித்துயிருப்பதாக நானே கூறினேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நான் குடிபோதையில் வாகனத்தில் போய் விழுந்துவிட்டேன் என்றும் எதிரிகள் மீதுள்ள முன் விரோதத்தின் காரணமாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் போலீசார் என்னிடம் 2 பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். மருத்துவமனையில் விசாரித்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல் எதிரிகள் அசிங்கமாக பேசவில்லை என்றும் இடது கையில் அடிக்கவில்லை என்றும் முதுகில் அடிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

1. சம்பவத்தில் எதிரிகள் எடுத்துச் சென்றதாக நான் புகார் கொடுத்த செல்போனை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள செல்போனை தான் நான் பெற்று சென்றேன். **(மேற்படி புகைப்படம் குறுந்தகடுடன் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்கு விசாரணை:**

1. நான் போலீசாரின் விசாரணையில் நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் எனது பணம் ரூ.1200/-யையும், செல்போனையும் 1 வது எதிரி எடுத்துக் கொண்டதாக தெரிவித்திருந்தேன் என்றும் எனது பணத்தை யாரும் எடுக்கவில்லை பதற்றத்தில் தவறுதலாக கொடுத்துவிட்டேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் மதுபோதையில் கீழே விழுந்ததில்தான் செல்போன் கீழே கிடந்தது என்றும் அதை திருச்செல்வம் எடுத்துக் காவல் நிலையத்தில் கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.